# கண்ணதாசன் கவிதைகளில் சமுதாயச் சிந்தனைகள்

# Social Thoughts in Kannadasan’s Poems

**முனைவர் செ. மாரியப்பன்**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
திட்டக்குடி

**Dr. S. Mariappan**
*Assistant Professor, Department of Tamil*
*Government Arts and Science College*
*Thittakudi*

## ஆய்வுச் சுருக்கம்

*பொதுவுடைமைத் தத்துவம் 19-ஆம் நூற்றாண்டில் காரல்மார்க்ஸ், எங்கெல்ஸ் ஆகியோரால் தோற்றுவிக்கப்பட்டது. சமுதாயத்தைப் புனரமைப்பதற்காக மாற்றி அமைப்பது ஒரு வரலாற்றுத் தேவை என்பது பொதுவுடைமைக் கொள்கையின் அவசியமாகும். அது பொதுவுடைமைத் தத்துவத்தின் இருபடி நிலைகளாக விளக்கப்படுகிறது. முதல்படி சமதர்மம், இரண்டாம்படி பொதுவுடமை, எந்த ஒரு நாடும் முதல்படி சமதர்மத்தை அடையாமல் இரண்டாம் படியான பொது வுடைமைக்கு வரமுடியாது என்கிறார் ந.பிச்சமுத்து (இலக்கிய இயக்கங்கள்-ந. பிச்சமுத்து, ப.158).*

***முக்கியச்சொற்கள்:*** *பொதுவுடைமை, ந. பிச்சமுத்து, தத்துவம், காரல்மார்க்ஸ், கம்யூனிஸ்ட், எங்கெல்ஸ்*

## Abstract

*The theory of communism was founded in the 19th century by Karl Marx and Engels. The necessity of communism is that the reorganization of society in order to reconstruct it is a historical necessity. It is interpreted as two-step states of communist philosophy. According to N. Picchamuthu (Literary Movements – N. Picchamuthu, p. 158) no country can come to the second stage of socialism unless it attains the first step of socialism.*

***Keywords:*** *Communism, N. Picchamuthu, Philosophy, Karl Marx, Communist, Engels.*

**Citation**

Mariappan, S. “Social Thoughts in Kannadasan’s Poems.” *Journal of Tamil Culture and Literature*, vol. 3, no. 1, 2023, pp. 17–23.

CC BY SA

*https://doi.org/10.5281/zenodo.20117757*

**முன்னுரை**

*பொதுவுடைமைத் தத்துவம் 19-ஆம் நூற்றாண்டில் காரல்மார்க்ஸ், எங்கெல்ஸ் ஆகியோரால் தோற்றுவிக்கப்பட்டது. சமுதாயத்தைப் புனரமைப்பதற்காக மாற்றி அமைப்பது ஒரு வரலாற்றுத் தேவை என்பது பொதுவுடைமைக் கொள்கையின் அவசியமாகும். அது பொதுவுடைமைத் தத்துவத்தின் இருபடி நிலைகளாக விளக்கப்படுகிறது. முதல்படி சமதர்மம், இரண்டாம்படி பொதுவுடமை, எந்த ஒரு நாடும் முதல்படி சமதர்மத்தை அடையாமல் இரண்டாம் படியான பொதுவுடைமைக்கு வரமுடியாது என்கிறார் ந.பிச்சமுத்து (இலக்கிய இயக்கங்கள் - ந. பிச்சமுத்து, ப.158).*

*கம்யூனிஸ்ட் என்றால் பொதுவான் பொருள். கம்யூனிச சமுதாயம் என்பது நிலம். ஆலைகள் யாவும் பொதுவுடைமையாய் இருந்து மக்கள் பொதுவில் கூட்டமாய் வேலை செய்யும் சமுதாயமாகும் (தமிழ் இலக்கியங்களில் பொதுவுடைமை, ப.26).*

***எல்லாரும் எல்லாச் செல்வமும் எய்தலாலே***
***இல்லாமை இல்லை உடையார்களும் இல்லை***

*என்று கம்பன் கூறுவது போல இல்லாரை இல்லாது செய்வது பொதுவுடைமையின் முதல் குறிக்கோளாகும். இப்பொதுவுடைமை இலக்கை அடைந்து விட்டால் நாடு செழிக்கும். பிற நாட்டுடன் பொருளாதாரத்திலும், வளர்ச்சியிலும், அறிவியல், கலை, கல்வி முதலிய எத்துறையிலும் போட்டியிடத்தக்க கல்வி மேலாண்மை பெற்றுவிடும். இதன்படி கண்ணதாசன் கவிதைகளில் பொதுவுடைமை கருத்துக்கள் எவ்வாறு அமைந்துள்ளது என்பது ஆய்வுப்படி இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

**தனியுடைமை தோன்றக் காரணம்**

*கூட்டுக் குடும்ப வாழ்க்கை முறை சிதையாமல் தொடங்கியதால் அனைவருக்கும் பொதுவாக இருந்த உற்பத்தி சாதனங்கள் ஆடு, மாடுகள் உழைப்புக் கருவிகள், நிலம் முதலியவற்றைத் தனித்தனியாகப் பிரித்து உரிமை கொண்டாடியதால் தனியுடைமைச் சமுதாயம் உருவாகத் தொடங்கியது. இதனால் நிலப்பிரபுத்துவம், முதலாளித்துவ முறைகள் தோன்றி மனிதனை மனிதன் சுரண்டி அடிமைப்படுத்தும் நிலை ஏற்பட்டது. இந்நிலையில் சமுதாயத்தில் பொருளாதார ஏற்றத் தாழ்வை உருவாக்கியது.*

**பொதுவுடைமை - பொருள் விளக்கம்**

*பொதுவுடைமைக் குறித்துக் கலைக் களஞ்சியம் கூறுவது,*

> ***“உற்பத்திச் சாதனங்களைச் சமூகத்தின் பொதுவுடைமையாக்கவோ அல்லது வருமானத்தைச் சமூக மக்களிடையே நியாயமான முறையில் பாகுபாடு செய்யவோ முற்படும் சமூக அமைப்பு முறை பொதுவுடைமை ஆகும்” - (கலைக்களஞ்சியம், ப.89)***

*தனிமனிதச் சொத்துரிமை முறைகள் அழிந்து எல்லாரும் உழைத்து, எல்லாரும் எல்லாமும் பெற்று, எல்லாரும் இன்புற்று வாழ்வதே பொதுவுடைமை ஆகும். பொதுவுடைமையில் தனிமனிதச் சொத்து வளர்ச்சிக்குச் சிறிதும் இடமில்லை. நாட்டின் வளர்ச்சிக்கே இடமுண்டு. ஆண்டான் அடிமை நிலை அறவே ஒழிய வேண்டும். எங்கும் எதிலும் சமத்துவம் நிலவ வேண்டும். சாதி, சமய வேறுபாடற்ற, ஏழைப் பணக்காரன் என்னும் வேறுபாடற்ற சமதரும மக்களாட்சியே*

*பொதுவுடைமையாகும். அரசியல், பொருளாதாரம், சமுதாயம் முதலிய எத்துறையிலும் சமத்துவம் காண்பதே இதன் அடிப்படைக் கொள்கை யாகும். நாட்டுக்கு உழைக்க வேண்டும் என்னும் பொது எண்ணமே ஒவ்வொரு குடிமகன் மூச்சிலும் இருக்க வேண்டும். அல்லும் பகலும் அயராக உழைத்து ஓடாய்ப் போன, பாட்டாளி மக்களுக்கு நல் வாழ்வளிப்பதே பொதுவுடைமை ஆகும். உழைக்கும் வலிமை வாய்ந்த அனைவரும் உழைத்து, அதனால் கிடைக்கும் வருவாயைச் சரிநிகர் சமானமாக அனைவருக்கும் பங்கீடு செய்வதே இக்கொள்கையின் நோக்கமாகும்.*

*இக்கருத்தைப் பாரதிதாசன்,*

***பொதுவுடைமைக் கொள்கை திசையெட்டும் சேர்ப்போம்***
***புனிதமோடதை எங்கள் உயிரென்று காப்போம்***
***ஒரு பொருள்தனி யெனும் மனிதரைச் சிரிப்போம்***
***இயல்பொருள் பயன்தர மறுத்திடில் பசிப்போம்***
***ஈவதுண்டாமெனில் அனைவரும் புசிப்போம்***

**கண்ணதாசன் காட்டும் பொதுவுடைமை**

*உலகில் வாழும் மனிதர்கள் யாவரும் நல்லின்பம் அடைந்து, இன்ப வாழ்வு வாழ வேண்டுமானால் அங்கே பொதுவுடைமை தழைத்தோங்க வேண்டும் என்கிறார் கண்ணதாசன். பொருளாதாரச் சமநிலை சமுதாயத்தை நிலைநாட்ட வேண்டுமென்றால் மக்கள் போராடியேனும் அதை உருவாக்க வேண்டும். மக்களை ஏய்த்துப் பிழைக்கும் நரியாக, தட்டிப் பறிக்கும் காகமாக அல்லாமல் பொதுவுடைமை உருவாகிட வேண்டும்.*

***எல்லாரும் எல்லாம் பெற வேண்டும் - இங்கு***
***இல்லாமை இல்லாத நிலை வேண்டும்***
***வல்லான் பொருள் குவிக்கும் தனியுடைமை - நீங்கி***
***வரவேண்டும் திருநாட்டில் பொதுவுடைமை***
***பாலென அழுவோர்க்குப் பால்தருவோம் - பசுங்***
***கூழெனத் துடிப்போர்க்குச் சோறிடுவோம்***
***தாயகம் காப்போரின் தாள்பணிவோம் - யாவும்***
***தமக்கென நினைப்போரைச் சிறையிடுவோம்***

*சமுதாயத்தில் உழைப்போர் நலிவுற்றும் உழையாதோர் நலமுற்றும் வாழும் ஏற்றத் தாழ்வினை நீக்கி சமத்துவச் சமுதாயத்தை அமைக்க, போர்க்கொடி தூக்கும் பொதுவுடைமை வாதியாகக் கவிஞர் விளங்குகிறார். சிலபேர் உழைக்கின்றனர். சிலபேர் அவர்களின் உழைப்பின் பயனை உறிஞ்சிக் கொழுக்கின்றனர். ஏன் இந்த மேடு பள்ளமுள்ள சமுதாயம். கண்ணதாசன் பின்வருமாறு கூறுகிறார்.*

***பரந்ததோர் நிலத்தை ஒருவர் கொள்ளாமல்***
***பங்கு போட்டு அமைப்பது எம்வேலை***
***இருந்துணும் பேரே எவரும் இல்லாமல்***
***எழிலுறச் செய்வது எம்வேலை***
***கரங்களின் வலிமை கட்டிய உலகம்***

***கனத்தவர் கொள்வதை ஏலோம்***
***மறவழியாலும் அறவலியாலும்***
***மக்களின் பொதுமையைக் காண்போம்***

**உழவர்களுக்குப் பொதுவுடைமை**

*தேவைக்கேற்ற உழைப்பு, உழைப்புக்கேற்ற ஊதியம் என்ற நிலை உருவாக வேண்டும். செல்வக் குவிப்பு, செல்வச் சரிவு மறைய வேண்டும். இதையே கவிஞர்,*

***பாடுபடும் உழவருக்குப்***
***பணமும் உண்டு உணவும் உண்டு***
***நாடுபெறும் லாபத்திலே***
***பயனும் உண்டு - எல்லாம்***
***நமது என்று எண்ணுகின்ற***
***நினைவும் உண்டு***
***தொழில் வளர்த்து வறுமை நீக்கித்***
***துயர் துடைக்க எழுகவே***
***தோன்றும் செல்வம் பொதுமையாக்கத்***
***தோள்கள் தட்டி எழுகவே***

*இவ்வாறு மனிதருக்குள் மறைந்து இருக்கும் ஆற்றல் உணர்வைத் தட்டி எழுப்புகிறார் கண்ணதாசன்.*

**சோசலிசம் வேண்டுவது**

*மக்கள் பசியில்லாமல் நன்றாக வாழ வேண்டுமென்றால் சோசலிசம் வேண்டுமென்கிறார் கண்ணதாசன்.*

***நூறுவேலி மிராசுதாரும் நோய் பிடித்த உழவர்மாரும்***
***சோறுக்கென்று சண்டை போடும் உலகமெங்கும் அந்த***
***சோசலிசம் கொண்டு வந்தால் உயிர்கள் தங்கும்***

*வறுமையைப் பங்கு போடுவது அல்ல பொதுவுடைமை. குடிசைகள் அனைத்தும் மாளிகைகளாக மாற வேண்டும். நாட்டுப் பொருள் அனைத்தும் ஏழையின் வீட்டுப் பொருளாக வரவேண்டும்.*

***ஓட்டைக் குடிசைக்குள் கூட்டுக் குடும்பங்கள்***
***வாட்டி வதைப்பதை மாற்றி அதை***
***மாளிகை மஞ்சத்தில் ஏற்றி - இந்த***
***நாட்டுப் பொருள் எங்கள்***
***வீட்டுப் பொருள் என்று***
***நாட்டிடுவோம் படை கூட்டி - வழி***
***காட்டிடுவோம் கனல் மூட்டி***

*நாட்டில் பொருளாதார சமத்துவம் வேண்டும் என்கிறார் கவிஞர். தனியார் உடைமைகள் ஒழிக்கப்பட்டு விட்டால் பொதுவுடைமை வந்து விடும். பொதுவுடைமை குறித்து இவ்வாறு செய்யப்படும் சில எதிர்ப்புகள், இன்னல்கள் வரும். ஏன் தம் உயிரைக் கூட இழக்க வேண்டும் என்கிறார்.*

***ஏழைக்கு வாழ்வு எல்லோர்க்கும் ஒரு வீடு***
***ஆளுக்கு இவ்வளவு ஆதிக்கம் எனும் படிக்கு***
***மாறிவரும் காலம் மாறத்தான் வேண்டும் இதில்***
***சாவு வரும் என்றாலும் சமுதாயம் துணிந்துவரும்***

*பகைவர்க்கு அருளும் நன்னெஞ்சம் கண்ணதாசனுக்கு உண்டு. பசிப்பிணியை அறுக்கும் இரக்கம் உடைய கவிஞரைக் காணமுடிகிறது.*

***பசியெனத் தோன்றுவார் பகைவர்கள் ஆயினும்***
***புசியென்று சொல்லுவோம் புதியதோர் உலகிலே***
***இருப்பவர் ஏழைக்குக் கொடுத்து வைப்போம் - அவர்***
***கொடுக்கவில்லையெனில் எடுக்க வைப்போம்***
***பசியெனும் வார்த்தையைப் பறக்க வைப்போம் - அதில்***
***பாரத தேசத்தைப் பிழைக்க வைப்போம்***
***உழைக்கும் மக்கள் ஒன்றே***

*உழைத்துப் பிழைக்கும் மக்கள் அனைவரும் ஒரே சாதியினரே. மக்கள் எவர்க்கும் தனித்தனி நீதி இல்லை. யாவருக்கும் சமநீதியே. உழைப்பாளராகப் பிறந்த அனைவரும் ஒரு தாய் மக்கள் என்போம் என்கிறார்.*

***ஒன்று எங்கள் சாதியே***
***ஒன்று எங்கள் நீதியே***
***உழைக்கும் மக்கள் யாவரும்***
***ஒருவர் பெற்ற மக்களே***

*உழைக்கும் மக்கள் ஒரு சாதியென்றால், உழைக்காது உழைப்போரின் உரிமையை உறிஞ்சி வாழும் மக்களை வேறு சாதியாக வேண்டும். இவர்களைக் கண்ணதாசன் முதலாளி வர்க்கம், தொழிலாளி வர்க்கம் என்கிறார்.*

***மேனி உழைத்துப் பாடுபடும் தொழிலாளர் எல்லாம் ஓரினம்***
***வியர்வை சிந்தாமல் வீட்டினில் வாழும் மாளிகை வாசிகள் ஓரினம்***
***கடலென நிறைந்தவன் தொழிலாளி - அதில்***
***படகென மிதப்பவன் முதலாளி***
***கடலுக்குச் சினம் வந்து அலைமோதி வரும்***
***முடிவினில் கிடைப்பது சமநீதி***

*கடல் போன்று அதிகமுள்ள உழைப்பாளர் வர்க்கம் தம் ஆற்றலை ஒன்று திரட்டி ஒரே முச்சினில் எழுந்தால், கடலாகிய தம் மீது மிதக்கும் படகாகிய முதலாளி போன இடம் தெரியாமல் போய் விடுவான். அதன் பின் உலகினில் சமநீதி கிட்டும் என்கிறார் கண்ணதாசன்.*

*இறைவன் இந்தப் பூமியைப் படைத்தான் என்கிறோம். அவன் அனைத்து ஆற்றலும் படைத்தவன் என்கிறோம். அப்படிப்பட்ட இறைவன் ஒருவர் உணவுக்கே வழியின்றி வாடவும், ஒருசிலர் உண்ட உணவு செரிக்க வில்லையே என்று ஏங்கவும் செய்வானா? இல்லை, இதற்கெல்லாம் காரணம் கடவுள் இல்லை, மக்களே காரணம்?*

***பூமியைப் படைத்தது சாமியா? - இல்லை***
***சாமியைப் படைத்தது பூமியா?***
***பிறப்பும் இறப்பும் அவன் பொறுப்பு***
***சிரிப்பும் அழுகையும் யார் பொறுப்பு?***
***பொன்னென அணிந்த மாளிகைகள்***
***புன்னகை மறந்த மண்குடிசை***
***பசிவர அங்கே மாத்திரைகள்***
***பட்டினியால் இங்கு யாத்திரைகள்***

**பொதுவுடைமை பூக்க வழிகள்**

*எல்லோரும் சமமாகப் பொருளைப் பெற்று வாழ வேண்டும் என்கிறார் கவிஞர். இல்லையென்றால் சமுதாயம் சீரழிந்து விடும் என்கிறார். மேலும் பணம் இருப்பவர்கள் இல்லாதவர்க்குக் கொடுக்க வேண்டும். கொடுக்க வில்லையென்றால் எடுப்பவர்கள் உட்புகுந்து எடுப்பார்கள்.*

***வீங்குகின்ற செல்வம் வீங்குவதும் ஆபத்து***
***ஏங்குகின்ற நெஞ்சம் ஏங்குவதும் ஆபத்து***
***அங்கம் பருந்து விட்டால் அழகுக் கலைகளுக்கே***
***பங்கம் வருவது போல் பணமும் ஒரு பக்கம்***
***சேர்ந்து கொண்டே போனால் சீரான சமுதாயம் அழகிழந்து***

*போகுமடி பெருஞ்சித்திரனார் என்ற புலவர் மன்னரைப் பாடி பொருள் பெற்றார். அப்பொருளைத் தமக்கென வைத்துக் கொள்ளாமல் தம் மனைவியிடம் கொடுத்து, இன்னார், இனியர் என்று பாராமல் எல்லோருக்கும் கொடு என்று கூறினார்.*

***வல்லாங்கு வாழ்தும் என்னாது நியும்***
***எல்லோர்க்கும் கெடுமதி மனை கிழவோயே (புறம்.163)***

*இதைப் போலவே கவிஞரும்,*

***உண்டாயின் பிறர் உண்ணத் தருவேன்***
***இல்லாயின் எமர் இல்லந் தட்டுவேன்***
***வண்டாயெழுந்து மலர்களில் அமர்வேன்***
***வாய்ப்புறத் தேனை ஊர்ப் புறந்தருவேன் (கண்ணதாசன் கவிதைத் தொகுப்பு - 5)***

**முடிவுரை**

*எல்லோருக்கும் எல்லாம் பெற்று இந்தச் சமுதாயத்தில் வாழ வேண்டும் என விழைகிறார் கண்ணதாசன். பணம் உடையவர்கள் இல்லாதவர்க்குக் கொடுக்க வேண்டும். அப்படி இல்லை என்றால் இல்லாதவர்கள் எடுப்பார்கள். நான் நிரந்தரமானவன் அழிவதில்லை. எந்த நிலையிலும் எனக்கு மரணமில்லை. ஆம் கண்ணதாசன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.*

## References

1. https://www.pothunalam.com/quotes-in-tamil/kannadasan-kavithaigal/